Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 03 திங்கட்கிழமை (20-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 307

### கடற்படையினர்-கடற்புலிகள்

# புல்மோட்டை கடற் பகுதியில் 5 மணி நேரம் கடும் சண்டை!

## டோரா ஒன்றும் படகுகளும் அழிப்பு எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்டோபர் 20

திருகோணமலை, புல்மோட்டைக் கடற் பகுதியில் சனிக்கிழமை இரவு கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் 5 மணி நேரம் கடும் சண்டை நடைபெற்றது. இந்தச் சண்டையில் கடற்படையினரின் உள்ளூர்த் தயாரிப்பு 'டோரா' படகு ஒன்று கடற் புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளாகி நீரில் மூழ்கடிக்கப்பட்டது என்றும் - கடற்புலிகளின் ஏழு படகுகள் அழிக்கப்பட்டன என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் கடற்படைப் படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே கடற்புலிகளுடன் மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட டோரா படகில் இருந்த கடற்படையினரில் இவர் பலியாகினர். ஏழு பேரைக்காணவில்லை. காணாமற்போனோரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் நேற்று விமானப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இந்த சண்டையில் கடற்புலிகளின் 7 படகுகளை நிர்மூலம் செய்துவிட்டதாகவும் 2 படகுகளை சேதப்படுத்தியதாகவும் இந்தப் படகுகளில் இருந்த 100 புலிகள் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மூழ்கடிக்கப்பட்ட டோரா கப்பலின் பெறுமதி 3 லட்சம் அமெரிக்க டொலர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் காயமடைந்த இரு கடற்படையி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அனுருத்த கொழும்பில் இருக்கவில்லை

கொழும்பு, ஒக். 20

கடந்த புதனன்று கொழும்பில் குண்டு வெடித்த சமயம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த கொழும்பில் இருக்கவில்லை என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சமயம் அவர் இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்தார் என்றும் — குண்டு வெடிப்பு தொடர்பாக அவருக்கு தகவல் அனுப்பப்பட்டது என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### வவுனியாவில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 20

கொழும்பு கோட்டையில் குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர் வவுனியாவில் உள்ள கடை ஒன்றில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலீஸ் அதிகாரிகள் இவரைக் கைது செய்தனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் 7 மாதங்களுக்கு முன்னர் இந்தச் சந்தேக நபர் வட பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வந்து அகதி முகாம் ஒன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு கூட்டணி கடும் எதிர்ப்பு

## அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஒக். 20

வடக்கு — கிழக்கு இணைப்புக்கு கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் அரசின் தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி கடுமையாக எதிர்க்கும்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானம் குறித்து நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் உத்தியோக பூர்வமாக அறிவிப்பார்.

மேற்படி கூட்டத்தில் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் பார்வையாளராக கலந்து கொள்கின்றார்.

சர்வஜன வாக்கெடுப்பு குறித்து அரசு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்த நேரம் ஒதுக்கீடு செய்யுமாறு ஜனாதிபதி செயலகத்தை கூட்டணி கேட்டுள்ள போதிலும் இது வரை பதில் கிடைக்கவில்லை என கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருதர் ''உதயனுக்கு'' தெரிவித்தார்.

(இ-21)

## நாளைய கூட்டத்தில் ஐ. தே. க. திருத்தங்கள் கொண்டுவரும்

கொழும்பு, ஒக். 20

நாளை நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் ஐ.தே.க சில திருத்தங்களை முன் வைக்கவிருக்கின்றது.

தற்போது புதுடில்லியில் தங்கியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பம்பெற இத் திருத்தங்கள் 'பக்ஸ்' மூலம் இன்று அனுப்பிவைக்கப்படும் என்றும் — அவரது அனுமதி கிடைத்தால் நாளை நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் அவை சமர்ப்பிக்கப்படும் என்றும் — ஐ.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டத்துக்கு கூடுதலான எரிபொருள்

## சமையல் வாயுவுக்கும் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். மாவட்டத்துக்கு கப்பல் மூலம் கூடுதலான அளவு எரிபொருளை அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக மின் சக்தி, எரிபொருள் அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

யாழ். மாவட்ட எரிபொருள் தட்டுப்பாட்டு நிலை தொடர்பாக நேற்று பெற்றோலியம் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்மீதானதடையைஎதிர்த்து ஸ்கொட்லாந்தில் பேரணி!

கொழும்பு, ஒக். 20

விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்று அமெரிக்கா அறிவித்துள்ளதை ஆட்சேபித்து எதிர்வரும் 27 ஆம் திகதி கண்டனப் பேரணி ஒன்று ஸ்கொட்லாந்தில் நடத்தப்படவிருக்கிறது.

இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இயங்கும் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெறும்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கும், அமெரிக்க காங்கிரஸுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பவும் இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

'லண்டனில் தமிழர் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக அமெரிக்க அரசுக்கு கடிதம் அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# நாடாளுமன்றத்தின் முன் புளொட் வெகுஜனப் போராட்டம் நடத்தும்

## 4 அம்சக் கோரிக்கைக்கு தீர்வு கிட்டாவிடில்

யாழ்ப்பாணம், ஒக். 20

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பலவேறு பிரச்சினைகள் தொடர்பாக எமது அமைப்பு முன்வைத்துள்ள 4 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக விரைவில் ஜனாதிபதியுடன் பேசவிருக்கிறோம் அவருடன் நடத்தும் பேச்சில் இணக்கம் ஏற்படாதபட்சத்தில்கொழும்பில் நாடாளுமன்றம் முன்பாக பெரிய அளவிலான வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்துவோம்.

புளொட் அமைப்பின் உப தலைவரும், அதன் தளபதியுமான என். மாணிக்கதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் [illegible] இல் உள்ள [illegible] அலுவலகத்தில் செய்தியாளர்களு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கலதாரி ஹோட்டலின் 327 அறைகள் சேதம்

## சேத மதிப்பீடு இன்னும் பூர்த்தி இல்லை

கொழும்பு, ஒக். 20

கடந்த புதன்கிழமை கொழும்பு கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின்போது கலதாரி ஹோட்டலின் 387 அறைகளில் 327 அறைகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் இந்த ஹோட்டலின் மூன்று உணவுச் சாலைகள், பிரதான மண்டபம் என்பனவும் சேதமடைந்துள்ளன.

கலதாரி ஹோட்டலுக்கு ஏற்பட்ட சேதங்கள் இன்னும் மதிப்பீடு செய்து முடியவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லையில் திறந்த பல்கலைக்கழகம், மண்கும்பானில் கல்விக் கல்லூரி

## இணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 20

குடாநாட்டின் கல்வி அபிவிருத்திக்காக வல்லையில் திறந்த பல்கலைக்கழகத்தையும், மண்கும்பானில் கல்விக் கல்லூரியையும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் இரண்டாவது நாளாக நேற்று நடைபெற்ற சமயம் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட இணைப்புக்குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடத்த இக்கூட்டத்தில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. அமைப்பாளர் வி. கே. ஜெகன், கல்விப் பணிப்பாளர்கள், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி, உதவி அரச அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி பற்றி விரிவாக ஆராயப்பட்டு கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

★ எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியர்களுக்காக கணனி பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படும். இதற்காக 10 கணனிகள் வழங்கப்படும். முதற்கட்டமாக 60 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

★ 50 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

★ தமிழர் கலாசாரத்தை பிரதிபலிக்கும் இசைக்கருவிகளை பாடசாலைகளுக்கு வழங்கல்.

★ யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்ட 4 கல்வி வலயங்களுடன் ஐந்தாவது வலயத்தை தீவுப்பகுதியில் ஆரம்பித்தல்.

★ குடாநாட்டில் தொகுதிக்கு இரு பாடசாலைகள் வீதம் முழுவளங்கள் கொண்ட பாடசாலைகளை அமைத்தல்.

★ போதியளவு விஞ்ஞான உபகரணங்களை பாடசாலைகளுக்கு வழங்கல்.

(இ-3)

## உயர் தொழில் நுட்ப நிறுவனம் கோப்பாயில்

யாழ்ப்பாணம், ஒக். 20

கோப்பாயில் உயர் தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றை அமைக்க கல்வி அமைச்சர் இணக்கம்தெரிவித்துள்ளார்.

உயர் தொழில்நுட்ப மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து யாழ்ப்பாணம் வந்துள்ள யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுடன் மாணவர்கள் கலந்துரையாடினார்கள்.

இதையடுத்து அவரின் ஏற்பாட்டில் மாணவர்கள் அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர்.

இதனையடுத்து அமைச்சர் மேற்கண்ட இணக்கத்தை தெரிவித்துள்ளார். (இ-3)

## மிதிவெடியில் சிக்கிய இருவர் படுகாயம்

வயாவிளான், இணுவில் பகுதிகளில் இடம்பெற்ற இரு மிதிவெடிச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்; ஒரு மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

வயாவிளான், கோணாவளை என்ற இடத்தில், தோட்டத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த — வயாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாயில் வசித்து வருபவரான — சித்தர் குழந்தைவேல் (வயது 61) என்பவர் மிதிவெடியில் சிக்கி இடதுகாலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

இணுவில் பகுதியில் ஒழுங்கை ஒன்றினூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த லட்சுமணன் வேதரூபன் (வயது 27) என்பவர் மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஒழுங்கையின் ஓரமாக செலுத்திய போதே மிதிவெடியில் சிக்குண்டார். மோட்டார் சைக்கிளும்சேதம்அடைந்தது.

படுகாயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-15)

## வீதி திருத்தம்

பளையிலிருந்து ஆனையிறவு வரையிலான கண்டி வீதி துரித கதியில் செப்பனிடப்பட்டு வருகிறது.

இவ்வீதித் திருத்த வேலைக்கென தினமும் லொறிகளில் கற்கள் கொண்டு செல்லப்படுகின்றன. (ஐ-117)


## மங்களகரமான திறப்பு விழா

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நிகழும் ஈசுர வருடம் ஐப்பசி மாதம் 03 ஆம் திகதி (20-10-1997) திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் வரும் சுப வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும்

"நல்லி சில்க்ஸ்"

என்னும் புடைவை ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்க இருப்பதால் வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லி சில்க்ஸ் ஸ்தாபனத்தார்

121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-1821)


## இந்து சமய பரீட்சை முடிவுகள்

திருநெல்வேலி, ஒக். 20

யாழ். சைவ பரிபாலன சபையினரால்,கடந்த ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட ஆண்டு 13 மாணவருக்குரிய இந்து நாகரிகம், இந்துசமயம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சைவ பரிபாலன சபையின் பரீட்சை செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசுவாமிதெரிவித்தார். (ஐ-135)

## காரைநகர் சிவன் கோயிலில் நூலகம் அமைக்க ஏற்பாடு

நெடுந்தீவு, ஒக். 20

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோயிலில் புதிய நூலகம் ஒன்றைத் திறக்க காரைநகர் தமிழ் வளர்ச்சிச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ் வளர்ச்சிச் சங்கத்தின் தலைவர் பிரமஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்களிடம் வெளிநாடுகளில் வதியும் பலர் இதற்கென நூல்களை வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் மார்கழித் திருவாதிரை தினத்தின் போது நூலகத்தை திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

இதேவேளை அங்கு பிரதி ஞாயிறுதோறும் அறநெறிப் பாடசாலை வகுப்புகள் நடைபெறவுள்ளன. (ஐ-111)

## நினைவுப் பரிசு

அண்மையில் அமிர்தசரஸ் நகருக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்துக்கு பொற்கோவிலின் மாதிரி வடிவம் ஒன்று நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

புதுடில்லியைச் சேர்ந்த பரம்ஜித்சிங் என்ற கைவினைஞர் மூன்று வாரங்களில் இந் நினைவுப் பரிசை வடிவமைத்தார்.


## இடைநிலை மருத்துவ சேவைக்கு ஆள்சேர்ப்பு

இடைநிலை மருத்துவ சேவைக்கு சுகாதார பணிப்பாளர் நாயகத்தால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இதுவரை அங்கு சமுகமளிக்காத எல்லா பரீட்சார்த்திகளும் எதிர்வரும் புதன்கிழமை (22-10-97) அன்று காலை 9.00 மணிக்கு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் காரியாலயத்துக்கு நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடனும் அதன் நிழற்பிரதிகளுடனும் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
2) கல்வித்தகைமை பற்றிய சான்றிதழ்கள்.
3) தேசிய அடையாள அட்டை.
4) உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பு (உமது அல்லது பெற்றோரது பெயர்கள் அடங்கிய)
5) கிராம சேவை அலுவலரின் வதிவிடச் சான்றிதழ்.
6) கிராம சேவை அலுவலரின் நற்சாட்சிப்பத்திரம் (இதில் வாக்காளர் பதிவு சம்பந்தமான உறுதி உரை).
7) உறுதிப்படுத்தப்பட்ட கல்விச் சான்றிதழின் நிழற்பிரதி.

(சி/1822)


## 700 பயணிகள் மன்னாரில் தவம் கிடப்பு

மன்னார், ஒக். 20

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதியின்றி 700 பயணிகள் மன்னாரில் தவம் கிடக்கின்றனர் என்று மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. மன்னாருக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த 15ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் வருவதற்காக மன்னார் வந்த 700 பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் சிறிய லொட்ஜுகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கி உள்ளனர்.

இந்தப்பயணிகளை அனுப்ப ஒரு சேவையை நடத்த வடமாகாண மீள்குடியமர்வு அதிகாரசபை அனுமதி வழங்கியும் கடற்படையினரின் அனுமதி இல்லாததால் சேவையை நடத்த முடியவில்லை என்று மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3)


## 7ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர்

கந்தையா குலசேகரம்பிள்ளை J. P.

(அரச மரக் கூட்டுத்தாபன ஒப்பந்தக்காரர், எழுதுமட்டுவாள்)

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கை காரணமாக நாம் இடம் பெயர்ந்த வேளையில் எம்மை ஆதரித்து, இருக்க இடமும் தந்து, பலவழிகளிலும் உதவி செய்த உத்தமர் கந்தையா குலசேகரம்பிள்ளை ஐயாவின் மறைவு எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. அவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக...!

பொ. கனகரத்தினம்
குடும்பத்தினரும், உறவினர்களும்.

இல. 441, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (C/1824)



VICKNA
TUITION CENTRE
A/L 98
ACCOUNTING
Mr. Balavasan
[illegible]
21-10-97 செவ்வாய்
4-00—5-00 மணி
(50668)



## மரண அறிவித்தல்

கனகசபை நடேசன்

(உரிமையாளர் – சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், இல. 23, கோபால் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நடேசன் 17-10-97 வெள்ளிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் செல்லப்பா கனகசபை (கணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்பு மகனும், திருமதி க. நேசமலரின் பெறாமகனும், மகேஸ்வரன் (இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்), திருமதி கமலாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், நிர்மலன், நிரஞ்சன், நிசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கணேசன் (மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம் கொழும்பு), சிவநேசன் (கணேசன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), சுந்தரேசன் (கனடா), யோகேஸ்வரி (கனடா), குமரேசன் (கனடா), அருள்நேசன் (சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தினி, இந்திராணி, தனஜா (கனடா), கதிர்காமநாதன் (கனடா), கலாரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் 21-10-97 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சரோஜினிதேவி
(மனைவி)

23, கோபால் லேன்,
யாழ்ப்பாணம். (50671)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பனுக்கு காலக் கெடு!

சென்னை, ஒக் 20

தான் பிடித்து வைத்துள்ள பணயக் கைதிகள் ஆறு பேரையும் விடுவிக்க எதிர் வரும் சனிக்கிழமை வரை வீரப்பனுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழக அரசும், கர்நாடக அரசும் இணைந்து கூட்டாக இக் காலக்கெடுவை விதித்துள்ளன.

வீரப்பன் விவகாரத்தில் இவ்வாறு இரு மாநில அரசுகளும் இணைந்து காலக்கெடு விதித்திருப்பது இதுவே முதற் தடவை ஆகும்.

நேற்று முன்தினம் மாலை கர்நாடக மாநில முதல்வர் ஜே எச். பட்டேலும் அவரது அரச அதிகாரிகளும் சென்னைக்கு வந்து தமிழக முதல்வர் மு. கருணாநிதியைச் சந்தித்து விரிவாக ஆலோசனை நடத்தினர்.

அதன் பின்னரே இரு மாநில அரசுகளினதும் இந்தக் கூட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது

வீரப்பன் சரணடைந்தால் அவருக்கு குறைந்த பட்ச தண்டனை உயிருக்குப் பாதுகாப்பு என்பன அளிக்கப்பட்டு தனியான முகாம் ஒன்றில் வைக்கப்படுவார் என்றும்—

வீரப்பனுடைய மற்றும் அவரது கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் மறு வாழ்வு அளிக்கப்படும் என்றும் ஏற்கனவே அளிக்கப்பட்ட சலுகைகள் இன்னமும் அப்படியே இருப்பதாகவும் வீரப்பன் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் மாநில அரசுகள் அறிவித்துள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமைக்குள் கைதிகள் விடுவிக்கப்படாவிடில் அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும்—

இவ்விடயத்தில் இராணுவ உதவிகள் உட்பட எல்லா உதவிகளையும் வழங்க மத்திய அரசு முன் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆர்ஜென்ரீனாவில் கிளின்ரனுக்கு எதிர்ப்பு

புவனர்ஸ் அயர்ஸ், ஒக். 20

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின போது ஆர்ஜென்ரீனாவுக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்ட அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந் நாட்டு இடது சாரிகள் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயிரக் கணக்கான இடது சாரிகளும், மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

''கிளின்ரனே வெளியேறு'' என அவர்கள் கோஷமிட்ட போது பொலீஸார் அவர்களை விரட்டினர். (ஐ)

உலக அரங்கில்

## ஊழலை விசாரிக்க ரூ. 49 லட்சம் செலவு

சென்னை, ஒக். 20

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்காக விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்கு மட்டும் 49 லட்சத்து 32 ஆயிரம் ரூபா செலவாகியுள்ளதாக தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

முதல்வர் கருணாநிதி தாக்கல் செய்த முதல் துணை மதிப்பீட்டில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டை விட்டுச் செல்வதற்கான அவகாசம் முடிந்தது;

# வெளிநாட்டுத் தொழிலாளரை தேடி சவுதி பொலீஸ் வேட்டை

ரியாட், ஒக். 20

சவுதி அரேபியாவுக்குள் சட்ட விரோதமாகத் தங்கியிருந்து தொழில் புரியும் வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேற விதிக்கப்பட்ட காலக்கெடு கடந்த வியாழனன்று முடிவடைந்தது.

இதனையடுத்து நாட்டை விட்டு வெளியேறாமல் இன்னமும் தங்கியிருப்போரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் ரோந்துப் பணியை ஆரம்பித்துள்ள பொலீஸார் முக்கிய நகரங்களின் ஒதுக்குப் புறங்களில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தங்கியிருக்கும் பகுதிகளை விளக்கும் வரைபடங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் தனியார் வீடுகளில் இத்தேடுதல் நடத்தப்பட மாட்டாது என்று சவுதி அரசு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு எதிரான சவுதி அரசின் இந்த நடவடிக்கை ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களை பெரிதும் பாதித்துள்ளது.

விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நாட்டைவிட்டு வெளியேற முடியாமற்போன ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கு நிர்க்கதியான நிலையில் விடப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடைசி நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான ''வீஸா', மற்றும் விமானப் பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. குடிவரவு குடியகல்வு நிலையங்களுக்கும் விமானப் பயண நிறுவனங்களுக்கும் வெளியே ஆயிரக் கணக்கானோர் இன்னும் கூட காத்து நிற்கின்றனர்.

தனது நாட்டவருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி கருதியும் சவுதி அரசு எடுத்த இந்த அவசர நடவடிக்கை மனித உரிமை அமைப்புக்களின் கண்டனத்துக்கு இலக்காகியுள்ளது.

பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் ஏற்கனவே தமது தாயகங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இவர்களில் பலர் தத்தமது நாடுகளில் பயண ஏஜென்ஸிகளிடம் பெருமளவு பணம் செலுத்தி வேலை வாய்ப்புப் பெறுவதற்காக சவுதிஅரேபியாவுக்குச் சென்றவர்களாவர். அங்கு வேலை கிடைப்பதற்கு முன்பாகவே இவர்கள் தாயகம் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(ஐ)

## வீரப்பனைச் சந்திக்க "நக்கீரன்" செய்தியாளர்?

### தமிழக அரசின் புதிய முயற்சி

சென்னை, ஒக். 20

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் பிடித்து வைத்துள்ள 6 பேரையும் மீட்கும் முயற்சியாக தமிழக அரசின் சார்பில் புதிய தூதர் ஒருவர் காட்டுக்குள் அனுப்பப்படுவார் எனத் தெரியவருவதாக ''தினமணி'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கர்நாடக மாநில முதல்வர் ஜே. எச். பட்டேல் தமிழக முதல்வரைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் இன்னும் ஓரிரு தினங்களில் இது தொடர்பான விவரம் வெளியிடப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற முறை அரசுத் தூதராகச் சென்று வீரப்பனுடன் பேச்சு நடத்திய ''நக்கீரன்'' ஆசிரியர் ஆர். கோபால் மீண்டும் வீரப்பனைச் சந்திக்கச்செல்ல மறுத்து விட்டார்.

அதனையடுத்தே புதிய தூதர் ஒருவரை தேடிப்பிடிக்கும் முயற்சியில் அரச தரப்பு ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோபாலுக்கு முன்னராகவே வீரப்பனுடன் நன்கு அறிமுகமானவரான ''நக்கீரன்'' சஞ்சிகை செய்தியாளரான சிவசுப்பிரமணியமே அநேகமாக அரசுத் தூதராக காட்டுக்குள் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

சித்தன்கேணி

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான

மகா கும்பாபிஷேகம் (22-10-97 புதன்).

இன்று 20 - 10 - 97 திங்கள் ஐப்பசி 3ஆம் நாள் காலை 9 மணி முதல் தூபிஸ் தாபனம், சுவாமிகளை ஆலயங்களில் நிலை நிறுத்துதல், அஷ்ட பந்தன மருந்து சாத்துதல், யாக பூசை வழிபாடு காலம் II, சாம்ப பரமேஸ்வர உபசார பூஜை, மாலை 3 மணி முதல் யாக பூஜை வழிபாடு காலம் III, சதுஸ் சஷ்டி உபசார பூஜை, நாளை அடியார்கள் எண்ணைக்காப்பு சாத்தல்

கும்பாபிஷேகம் இனிதாக நடைபெற சிவனருள் வேண்டி நிற்கும்,

சிவனடியார்கள்

விளம்பர அன்பளிப்பு:

MEDI LAND பார்மஸி

பிரதான வீதி, சங்கானை. (50560)

உ

மங்களகரமான திறப்புவிழா

ஆடவர், வனிதையர், மழலைகளுக்கு அழகுக்கு மெருகூட்டும்

ரம்மியமான ஆடை வகைகளை

நீங்கள் உங்கள் எண்ணம் போல எண்ணற்ற ரகங்களில் தீபாவளிப் பண்டிகைக்கு

தெரிவு செய்வதற்கென

இன்று (20-10-97) யாழ். நகரில் இலக்கம் 121, மின்சார நிலைய வீதியில்

மங்களகரமாக திறக்கப்படுகின்றது.



ரம்மியாஸ் பட்டுச்சோலை

( பட்டு ஆடைகளின் சங்கமம் )

★ அன்பர்கள் ★ ஆடைப் பிரியர்கள் ★ வணிகப் பெருமக்கள் அனைவரையும்

வருக வருகவென இன் முகத்துடன் வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

RAMIYAAS SILK



[50565]

உரிமையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்

தன்னலமற்ற கடமை தவறாத சேவையால் உயர்ந்து யாழ்ப்பாணம், பெரும்பகுதி அஞ்சல் அத்தியட்சகராக (Divisional Supdt. of Post Offices) பதவி உயர்வு பெற்று கடமையேற்றிருக்கும்

**உயர்திரு. எஸ். தர்மராஜன்**

அவர்களை அகமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம். இவர் நீண்ட ஆயுளுடன் வாழ எம்பெருமானை பிரார்த்திக்கிறோம்.

**கா. ஜெகநாத்**
(முன்னாள் உபதபால் அதிபர், யாழ்.கிளை தலைவர், சங்குவேலி)

**ஆ. சி. கணேசவேல் J. P,**
கந்தரோடை

**க. கிருபாநந்தன்**
காரைநகர் துறைமுகம்.

(50663)

# லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி யாழ்ப்பாணம்
# பிரவேசம் - 1998

தகைமைகள் க. பொ. த. உயர்தரம் (வைத்திய பரம்பரைக்கு முன்னுரிமை வழங்கப்படும்) விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 30 – 11 – 97

**நா. வாமதேவன்**
அதிபர்

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(50610)

**புத்தூர்**
# யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
## தமிழ்ச் சங்க வளர்ச்சிக்கான
# அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இலக்கம் 4679
2 ஆம் பரிசு இலக்கம் 8809
3 ஆம் பரிசு இலக்கம் 5946

ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள் பின்வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| 0118 | 1163 | 4691 | 7954 | 4786 |
| 7048 | 7713 | 7530 | 9440 | 2139 |

மேற்குறித்த அதிர்ஷ்ட இலக்கங்களைக் கொண்ட அதிர்ஷ்டசாலிகள் தமது பரிசில்களை 22.10.97 தொடக்கம் 22.11.97 வரையுள்ள காலத்தில், கல்லூரி அலுவலக நேரங்களில் காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

இச்சீட்டிழுப்புக்கு பலவகையிலும் உதவிய எமது சக கல்லூரிகளுக்கும், பொது நிறுவனங்களுக்கும், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது சங்கத்தின் இனியநன்றிகள்.

செயலர் தலைவர்

(50655)

# UNIVERSITY OF JAFFNA
# TENDER NOTICE

The Chairman, tender board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for Civil Engineering works.

"Supplying and fixing fixed furniture at Professor's room andOffice, Chemistry Block"

Tender forms may be obtained from the works Engineer (civil) University of Jaffna unti 28-10-97 on producing Registration book and cash payment of the following tender fees at the shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit Rs. 1,250/-
2. Non – refundable Deposit - Rs. 250/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 7-11-1997 at 10-00 a. m.

Tender forms may be seen by the tenderers at the Maintenance branch of this University during office hours if necessary.

**Dr. K. Kunarasa**
Registrar

University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/1797)

# கொழும்பு- வவுனியா ரயிலில் வசதிகள் ஏற்படுத்த கோரிக்கை

வவுனியா, ஒக். 20

வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் வவுனியா கொழும்பு ரயிலிலும் வவுனியா ரயில் நிலையத்திலும் போதிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

மன்னார் ஊடாக கப்பலில் வரும் பயணிகளும், வன்னியில் இருந்து உயிலங்குளம் ஊடாக வரும் பயணிகளும் கொழும்பு செல்வதற்காக வவுனியா ரயில் நிலையத்துக்கு அதிக எண்ணிக்கையில் வருவதைச் சுட்டிக்காட்டி இக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது,

அண்மையில் வவுனியாவுக்கு விஜயம்செய்த போக்குவரத்துஅமைச்சர் ஏ.எச்.எம் பௌசியிடம் வவுனியாரயில் நிலைய அதிபர் இக் கோரிக்கையை விடுத்தார்.

வவுனியா — கொழும்பிற்கு இடையில் சேவையாற்றும் இரவு தபால் ரயிலில் மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கைப் பெட்டிகள் இரண்டையும், இரண்டாம் வகுப்பு உறங்கலிருக்கை பெட்டி ஒன்றையும் இணைத்துத் தரும்படியும் —

வவுனியா ரயில் நிலைய தரிப்பிட மேடையை முந்நூறு அடிகள் விஸ்தரிக்குமாறும் —

தற்போதுள்ள பயணிகள் தங்கும் விடுதியை பொலீசார் பயன்படுத்தி வருவதால் பயணிகள் தங்குவதற்கு வசதியான தங்கும் அறையொன்றை அமைத்துத்தரும் படியும் — அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் பௌசிஉடனடியாக ரயில்வே திணைக்கள முகாமையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டார்.

(ஐ - 164)

# பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள்

பளைப் பிரதேசத்தில் பிறந்தவர்கள் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலக மேலதிக பதிவுகாரர் அலுவலத்திற்கு இங்கிருந்துஅனுப்பப்பட்டு பிறப்புச்சான்றிதழ்கள் பெற்றுக் கொடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# மங்களகரமான திறப்பு விழா

நிகழும் ஈசுர வருடம் ஐப்பசி மாதம் மூன்றாம் திகதி திங்கட்கிழமை (20 - 10 - 1997) காலை 10-30 மணியளவில் வரும் சுப வேளையில்

**இலக்கம்: 26, 28, பெரிய கடை**

என்னும் முகவரியில்

# சிவராதா பட்டுச் சோலை

என்னும் புடைவை ஸ்தாபனத்தை புதிதாக ஆரம்பித்து வைக்க இருப்பதனால் வாடிக்கையாளர்கள், வணிகப் பெருமக்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

- உரிமையாளர்

(50666)

# யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
# பரிசளிப்பு விழா - 1996

காலம்: 1997 - 10 - 22 புதன்கிழமை முற்பகல் 9. 00 மணி (புதிய நேரம்)

**தலைவர்:**
திரு. கா. தவராசா அவர்கள்
அதிபர்

**ஆசியுரை:**
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்
பிரதமகுரு, கொண்டலடி விநாயகர் தேவஸ்தானம்

**பிரதம விருந்தினர்:**
திரு. சு. இரத்தினராசா அவர்கள்
கல்விப்பணிப்பாளர், வலயம் 1

**பரிசில் வழங்கல்:**
திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா அவர்கள்

அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

யாழ்ப்பாணம்.

குறிப்பு:-

1995 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் அன்றைய தினம் சமுகமளித்து தமக்குரிய சான்றிதழ்களையும், பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள் (21. 10. 97 செவ்வாய் பகல் 12. 00 மணிக்கு மேற்படி மாணவர்கள் அதிபரைச் சந்திக்கவும்)

(சி/1820)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருடம் ஐப்பசித்திங்கள் 5 ஆம் நாள் (22—10—1997) புதன்கிழமை காலை 10-30 12.00 மணிவரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

எங்கள்சிரேஷ்ட புத்திரன்
**சிவஸ்ரீ தி. ஜெயச்சந்திரக் குருக்கள்**
(உடுப்பிட்டி, வல்லவாழி விநாயகர் ஆலயப் பிரதம குருக்கள்) அவர்கட்கும்



எங்கள் திருநிறை செல்வி
**சி. ராதாராணி**
அவர்கட்கும்

எல்லாம் வல்ல விக்கினேஸ்வரப் பெருமானருளால் மணமகள் இல்லத்தில் கன்னிகாதானம் திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 23—10—1997 வியாழக்கிழமை மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி
ம திருஞானசம்பந்தக்குருக்கள்
(பிரதம குரு, வியாபாரிமூலை இன்பர்சிட்டி பிள்ளையார் கோயில்)
சன்னதிறோட், பத்தமேனி,
அச்சுவேலி.

திருமதி
இ. சிவசிதம்பரக்குருக்கள்
16/7, சீனியர்வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

(50624)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடை பயின்ற கர்ப்பிணியின் சிசு நிலத்தில் வீழ்ந்து மரணம்!

## யாழ். ஆஸ்பத்திரியில் சோகச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 20

தலையிடியும் காய்ச்சலும் தனக்கு தனக்கு வந்தால்த்தான் தெரியும் என்பார்கள். ஆனால், யாழ். போதனா வைத்தியசாலையிலோ நிலைமை வேறு.

ஒரு பிரசவத்தாய் அனுபவிக்கின்ற பிரசவ வேதனை என்னவென்பதையும்—

**அனுபவ ரீதியாக அந்தத்தாய் பிரசவ நேரத்தையும் அறிந்துகொள்வதையும் விட தமக்குத்தான் அதிகம் தெரியும் என்பது போல நடந்து கொள்கின்றனர் அங்குள்ள தாதிமாரும், ''அட்டென்டன்மாரும்''.**

**இவர்களின் இத்தகைய பொறுப்பற்ற தனத்தால்- கவலையீனம் காரணமாக— இப்பூவுலகில் புதுப்பொலிவுடன் ஜனனிக்கவேண்டிய பிஞ்சுக் குழந்தை ஒன்று பிறந்த அன்றே- பிறந்தவுடனேயே மரணிக்க நேர்ந்தது.**

இந்தத் துயரச் சம்பவம் கடந்த 9 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அரங்கேறியது.

அன்று மாலை 6.15 மணியிருக்கும். ஒரு கர்ப்பிணித் தாய் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றார். தனது வேதனையை வெளிப்படுத்தி தன்னை பிரசவ அறைக்கு அனுமதிக்கும்படி அங்கு கடமையில் இருந்தவரிடம் தெரிவித்தார். ''பிரசவத்திற்கு நேரம் இருக்கின்றது; நீர் அந்த வராந்தாவில் நடந்து திரியும்'' என்ற பதில் அத்தாய்க்கு கிடைக்கின்றது. அந்தப் கர்ப்பிணித் தாய் நடந்து கொண்டிருந்தார். சில நிமிடங்களில் பிரசவம் நிகழப்போவதை அந்தத்தாய் உணர்ந்து கொண்டு பிரசவம் நிகழப்போவதாக கூறுகின்றார். ஆனால், அங்கு கடமையில் நின்றவர்களோ எதையுமே காதில் வாங்கவில்லை. பழைய துணி எடுத்து வருமாறு பணிக்கப்படுகின்றார். அந்தத் தயாயர் கூட நின்றவரை பழைய துணி எடுத்துவருமாறு கூறியபோது, அவரையே பழையதுணி எடுத்துவருமாறு பணிக்கின்றார் கடமையில் இருந்த பெண் ஊழியர்.

பழைய துணி எடுத்துவர சென்ற அந்தக் கர்ப்பினித்தாய் அங்கேயே நடைபாதையிலேயே — குழந்தையைப் பிரசவிக்கின்றார். நின்ற நிலையில் நடந்த இப்பிரசவம் காரணமாக குழந்தை பிமெந்து நிலத்தில் தலை மோதுண்டு விழுகின்றது. தலை மோதுண்ட சத்தம் தனக்குக் கேட்டதாக அந்தத்தாய் கூறுகின்றார்.

குழந்தை அந்தவிடத்திலேயே மூர்ச்சையானது.

போதாதற்கு அவ்விடத்தில் வைத்தே பிரசவப் பணிகள் அங்கு மேற்கொள்ளப் படுகின்றன.

குழந்தையை சேமமாகப் பிரசவிப்பதற்கென்று யாழ். போதனா வைத்தியசாலைக்குள் காலடி எடுத்துவைத்த அந்தத் தாய் பிரசவித்த குழந்தை அவ்விடத்திலேயே மரணித்த சோகத்தில் வெறுமையாக — வேதனையுடன் வைத்தியசாலையைவிட்டு வெளியேறினார்.

இவ்வாறு யாழ். போதனாவைத்தியசாலையில் —பிரசவ வார்ட்டில் பல பிரசவத் தாய்மார் பெரும் சிரமங்களையும், துக்க நிகழ்வுகளையும் சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கியநிலை இருந்து வருவதாக அங்கு பிரசவத்திற்கு சென்ற பல தாய்மார்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

பிரசவ நிகழ்வின்போது தாய்மார் இயற்கையாகப்படும் கஷ்டங்கள் துன்பங்களுக்கு மேலதிகமாக அங்கு அந்நேரம் சேவையில் இருக்கும் சேவையாளர்களின் (குடும்ப நல சேவையாளர், தாதியர்) வசைமொழிகளும் நோயாளரை சிரமப்படுத்தும் செயல்களும் அனந்தம்.

உதாரணமாக பிரசவநேரம் நெருங்கும் தறுவாயிலும், நடைப்பயிற்சியில் இருந்து விடுபடுவதும், அங்கு கடமையில் இருக்கும் சேவையாளர்களின் மனநிலையைப் பொறுத்ததாகவே உள்ளது.

பிரசவ வேதனையில் கஷ்டமுறும் ஒரு தாய் தன் நிலையை அந்த கடமையில் இருப்பவர்களுக்கு தெரிவிக்கும் போது, அவர்கள். பிரசவத்திற்கு நேரமிருக்கிறது அது வரை சும்மா இருக்காது நடந்து கொண்டிருக்குமாறு கட்டாயப்படுத்தி நடக்கவைக்கின்றனர். நடக்கவைப்பது பிரசவத்திற்கு ஒரு சுகமான பயிற்சியாக அமைவது உண்மைதான். ஆனால் பிரசவம் நிகழும் கடைசி நிமிடம்வரை நடைப்பயிற்சி தேவையா என்று தாய்மார் பலரும் கேட்கிறார்கள்.

சுகப் பிரசவத்திற்கு என்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற கர்ப்பிணித் தாய்மார் மீது அங்கு கடமையாற்றுகின்ற தாதியர் மற்றும்' அட்டெண்டன்மாரின் அதிகார, அட்டகாச மேலோங்கித் தனம் குறித்து வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா? என்று கர்ப்பிணித் தாய்மார் கேள்வி எழுப்புகின்றனர்.

(ஐ)

# பளைப் பிரதேசத்தில் முதியோர் கௌரவிப்பு

சர்வதேச முதியோர் வாரத்தை ஒட்டி பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இருபது முதியோர்களைக் கௌரவிக்கும் விழா கடந்த வியாழக்கிழமை பளைப் பிரதேச செயலக மண்டபத்தில் பளைப்பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் பளைப் பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தென்னைவள அபிவிருத்தி அலுவலர் க. தனிநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட 20 முதியோர்களுக்கும் அன்பளிப்புப் பொதிகள் வழங்கப் பட்டன. முதியோர் வாரத்தை ஒட்டி நடத்தப் பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் சித்தி பெற்றவர்களுக்கும் இவ் விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(ஐ-117)

# நாய்களுக்கு பதிவு இலக்கத் தகடு

திருநெல்வேலி, ஒக். 20

யாழ். மாநகர சபைப்பகுதியில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு இலக்கத் தகடு விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பு ஊசி மருந்து போடப்படும் இடங்களில் வைத்து மாநகர சபையினரால் நாய்கள் பதிவு செய்யப் பட்டு 10 ரூபா 50 சதம் அறவிடப்பட்டுப் பதிவு இலக்கத்தகடும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

(ஐ-135)


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் ஐப்பசி மாதம் 05 ஆம் நாள் (22—10—1997) புதன்கிழமை காலை 9-00 மணி முதல் 10-30 மணி வரையுள்ள தனு லக்கினமும், புனர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**இலக்ஸ்மன்**
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சுகிர்தா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி
**கு. அருளானந்தம் குடும்பம்**
நாச்சிதோட்டம், 'இலக்குமி வாசம்',
அளவெட்டி வடக்கு, அளவெட்டி,
தற்போதைய முகவரி:
61/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
**அ. சபாரட்ணம் குடும்பம்**
'அருளகம்'
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(இரு வீட்டார் அழைப்பு) (59651)


# முஸ்லிம்கள் யாழ். திரும்ப புலிகளின் சம்மதம் அவசியம்

## முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 20

''யாழ். முஸ்லிம்கள் மீளக் குடியமர வேண்டுமென்று, தமிழ் மக்கள் மாத்திரம் விரும்பினால் போதாது. விடுதலைப் புலிகளும் விரும்ப வேண்டும். ஏனெனில், புலிகள்தான்முஸ்லிம்களை வெளியேற்றினார்கள். அவர்கள் தான் முதலில் விருப்பம் தெரிவிக்க வேண்டும்.''

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் துணைத் தலைவர் மருதூர்க்கனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரம்பாவை தலீகஹவெவ அகதிகள் முகாம் பகுதியில் வீதிஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டபோது அவ்வாறு செய்யாதீர்கள் என்று கூறுவதற்கு தமிழ்மக்கள் நினைத்திருந்தாலும் அவர்களால் எதுவும் பேசமுடியவில்லை. இதற்கான காரணம் என்னவென்பது அனைவருக்கும் தெரிந்ததே. அப்படித்தான் முஸ்லிம்களை வந்து குடியேறுமாறு புலிகள் இப்போது அழைத்தாலும் கூட வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கான அதிகாரப் பகிர்வில் அரசும் புலிகளும் ஓர் இணக்கத்துக்கு வராமல் — அவசரப்பட்டு — யாழ். முஸ்லிம்கள் அங்கு குடியேறுவது அவ்வளவு புத்திசாலித்தனமான காரியமாகப் படவில்லை.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [ஐ-5]

# பளைப்பிரதேச செயலகத்தில் அ. அட்டைகள் தேக்கம்

தென்மராட்சி, ஒக்.20

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பளைப் பகுதியில் தங்கியிருந்தவேளையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சிலரின் அடையாள அட்டைகள் பளைப் பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளன. இவர்கள் தமது நிரந்தர முகவரியைக் குறிப்பிடாததனால் உரியவர்கள் அவற்றை பிரதேச செயலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர்கள் வருமாறு:-

- ★ சுப்பையா நவசிவாயம்.
- ★ நவசிவாயம் சிவபாக்கியம்.
- ★ செங்கேஸ்வரன் பாலேஸ்வரி.
- ★ யோசப் டேவிட் சுபாசினி.
- ★ தெய்வேந்திரம் பாலதுரை.

பளைப் பிரதேசத்தில் தங்கியிருந்த வேளையில் விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினரின் அடையாள அட்டைகள் சொந்த முகவரிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# 'சமுர்த்தி' உறுப்பினர்களுக்கு பளையில் நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி, ஒக். 20

பளைப் பிரதேசத்தில் சமுர்த்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சமுர்த்தி உதவியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த வெள்ளியன்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பளைப் பிரதேசத்தில் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகள் இந்நேர்முகப் பரீட்சையில் கலந்துகொண்டனர். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் தலா இருவர் வீதம் உதவியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். அதில் ஒருவருக்கு சமுர்த்தி நியமனம் வழங்கப்படும். மற்றவர் மேலதிகமாக அப்பணியில் வைத்திருக்கப்படுவர். அத்துடன் பளைப் பிரதேசத்திற்கு இரண்டு சமுர்த்தி முகாமையாளர்களும் தெரிவு செய்யப்படுவர்.

சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு பட்டதாரிகளும், உதவியாளர் பதவிக்கு ஜி. சீ. ஈ. உயர்தரம் சித்தி பெற்றவர்களும் நியமிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# தட்டி வான் சேவையை மாமுனை வரை நீடிக்குக

## சமூக அபிவிருத்தி அமைப்புக் கோரிக்கை

செம்பியன்பற்று, ஒக். 20

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு பருத்தித்துறையில் இருந்து நாகர் கோயில் வரை நடத்தப்பட்டு வரும் தட்டி வான் சேவையை பருத்தித்துறையில் இருந்து மாமுனை வரை விஸ்தரிக்குமாறு கோரி மாமுனை கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு வடமராட்சி சிற்றூர்தி சங்கத்திற்கு மகஜர் அனுப்பி உள்ளது.

மாமுனையில் இருந்து நாகர் கோயிலுக்கு மூன்று மைல் தூரம் மக்கள் நடந்து வர வேண்டி உள்ளது. எமது பகுதியில் கணிசமான மக்கள் இருந்தும் ஏன் யாரும் எமது துன்பத்தை கணக்கில் எடுப்பதில்லை என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(ஐ-36)


**NEW SCIENCE ACADEMY**
நல்லூர்
**98 A/L**
கணக்கியல்
திரு. பாலவாசன்

பங்குடமை முடிவுக் கணக்கு
(சேரல், விலகலுடன்)

ஆரம்பம்: 22 - 10 - 97
புதன் காலை - 6.30 மணி

(50652)


# மிதிவெடி எச்சரிக்கை சுவரொட்டி

''மிதி வெடிகள் கவனம். உங்கள் கவனமே உங்களைப் பாதுகாக்கும்'' என்ற தலைப்பில் ''யுனிசெப்'' நிறுவனம் சுவரொட்டி ஒன்றைத் தமிழ் மொழியில் வெளியிட்டுள்ளது. மிதி வெடிகளிலிருந்து ஏற்படும் பாதிப்புகளை தவிர்ப்பது எப்படி? என்ற விவரங்கள் படத்துடன் இந்த சுவரொட்டியில் விளக்கப் பட்டுள்ளன. (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள EN 9606 ஒஸ்ரின் கேம்பிரிட்ஜ் EY 3196 சோமசெற், மற்றும் A 60 கார்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. யோகராசா, ரயர்கடை, மந்திகை, புலோலி.
[சி/1802]

நல்ல நிலையிலுள்ள MORRIS MINOR கார் [EN series, 1000 Engine] உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. ச. சடாட்சரநாதன், 49, அம்மன் வீதி, யாழ்ப்பாணம். [50647]

பிறிமா பிறவுண், வெள்ளை 8 நாள் பேட்டுக் குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு. மற்றும் புறோயிலர் குஞ்சுகளும், உடன் தொடர்பு: மல்லிகாபதி, சந்தை கிழக்குஒழுங்கை, மானிப்பாய். [50664]

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மைனர் சையிற்வால்வ் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; V.T.R. குருக்கள் (தபாற்கந்தோர் அருகில்) நெல்லண்டை, பருத்தித்துறை. [50653]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த, நல்லின தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலைதீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பயன்தரக்கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை. [50590]

### தவறிவிட்டது

சி. சிவேந்திர சர்மாவின் துவிச்சக்கரவண்டி (இந்தியன் ரலி) V. 536916 இலக்கத்தையுடையது நல்லூர் சிவன் கோயிலடி முன் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது 15-10-97 புதன்கிழமை பகல் 1.00 மணியிலிருந்து தவறிவிட்டது. அதைக் கண்டவர்கள் சி. சிவேந்திரசர்மா, வீரகத்திப்பிள்ளையார் கோயில், இருபாலை கிழக்கு, கோப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
[சி/1814]

மேனன் ஆகிய எனது சிறிய மணிபேர்ஸ் முக்கிய விலாசங்கள், கப்பல் பயணத்துண்டு. இன்னும் சில ஆவணங்களுடன் பிரதான வீதிக்கும், யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தீபன்ஸ், பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [50656]

**வெளிவந்து விட்டது**

**G.C.E. O/L**

அஸ்ரன் பப்பிளிக்கேசன்ஸ்
1988 Dec - 1996 Dec வரை
10 வருட வினாவிடைகள்
தொடர்பு:
சாயிமெடிக்கல்ஸ்,
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(50648)

### அமெரிக்க வீசா

அமெரிக்காவுக்கான குலுக்கல் முறையில் இலவச விசா வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பிறைற் இன்ஸ்ரிரியூட், பிளாச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்). [50654]

### நாடகம் எழுதுவது

எப்படி? என்பதை விளக்கும் முதலாவது தமிழ் நூல் எல்லா மாணவர்களுக்கும் பயன்படக் கூடியது ஒரு நாடகமும். 22 கட்டுரைகளும். 275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது. 50/-
(50454)

## பளைப் பகுதி அ. அட்டைகள் விநியோகம்

தென்மராட்சி, ஒக். 20
பளைப்பிரதேசத்தில் இராணுவக் காவலரணுக்கு வெளியே உள்ள முகமாலை, இத்தாவில், முகாவில், கோவில்வயல், இயக்கச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் ஒரு தொகுதி விசேட அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளன.

இவ்விசேட அடையாள அட்டைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிரதேச செயலகத்தில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஐ-117)

உ

## நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் கோயில் பரிபாலன சபை

## 1998 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

1. 1979-11-03 ஆம் தேதியிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றத்தின் TR 105 ஆம் இலக்கம் கொண்ட பூரணதீர்வையின் பிரகாரம் மேற்படி சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை 1998-01-25 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10-00 மணிக்கு கோயில் மடத்தில் நடத்த ஒழுங்கு செய்யப்படுகிறது என்பதைச் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றேன்
2. இக் கூட்டத்தில் 1994-04-10 ஆம் தேதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகசபை உறுப்பினரே பதவியில் இருப்பர். ஆகவே இக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு நடைபெற மாட்டாது என்பதையும் அறியத்தருகிறேன். நீதிமன்றப் பூரணத்தீர்வையின் பிரகாரமே இம் முடிவை நான் எடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். நீதிமன்றப் பூரணதீர்வைக்கு முரணாகவோ, திருத்தமாகவோ ஆக்கப்பட்ட எந்த உப விதிகளுக்கோ, தீர்மானங்களுக்கோ, நடவடிக்கைகளுக்கோ நான் சம்மதம் அளிக்க முடியாது என்பதை வெளிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.
3. 1997-05-15 ஆம் தேதியன்று நான் 'உதயனில்' வெளியிட்ட 46, 940 ஆம் இலக்கம் கொண்ட அறிவித்தலை இத்தால் ரத்துச் செய்கிறேன்.
4. கோயில் நலனில் அக்கறை கொண்ட அங்கத்தவர்கள் எவரேனும் நேரம் குறிப்பிட்டு என்னுடன் கலந்துரையாடலாம் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றேன். நன்றி.

**முருகர் சிதம்பரப்பிள்ளை**
பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும், தலைவரும்
(50649)



அன்பான வாடிக்கையாளருக்கு
ஒரு நற்செய்தி!

## மீண்டும்!! மங்கை சில்க்

சுன்னாகம் நவீன சந்தை இல 8 இல்
இயங்கி வந்த
மங்கை சில்க் புடைவை ஸ்தாபனம்
மீண்டும் (20-10-97)
ஆரம்பமாகவுள்ளது என்பதை
வாடிக்கையாளருக்கு மிக்க மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.



**"மங்கை சில்க்"**
இல. 8, நவீன சந்தை, சுன்னாகம்.
(சி-1794)
மங்கை ஸ்தாபனத்தார்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்: 15 — 05 — 1916



விண்ணில்: 20 — 09 — 1997

### அமரர் செல்லையா சின்னத்துரை
(செட்டியார்)

திதி: 20-10-97

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையஇறைவனைப்பிரார்த்திப்பதோடு இன்று நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அன்னை இல்லம்,
வல்வெட்டி.
(சி/1800)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மாணிக்கம் வல்லிபுரம்
(பருத்தித்துறை பிரபல வர்த்தகரும் மொடேன் ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபகரும்)

தோற்றம்: 15-05-1919
மறைவு: 01-11-1996

திதி: 21-10-97

ஐயா! எங்கள் தந்தையே தங்களைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை ஐயா எங்கள் துன்பம். மாறாத துன்பத்தை சுமந்து நீறாகிவிட்ட எங்கள் இதயங்களை தேற்றுவார் யார் ஐயா?

எங்கள் இல்லத்தின் இமயம் சாய்ந்த ஓராண்டு நிறைவையொட்டி 21-10 1997செவ்வாய்க்கிழமை ஸஸ்டித்திதியில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக்கான கிரியைகளிலும் அன்றையதின மதிய போசனத்திலும் கலந்து எமது அன்புத் தந்தையாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து உதவும்படி உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களை பணிவன்புடன் வேண்டுகிறோம்.

பிள்ளைகள்
வ. புவிநாதன் (விநாயகர் ஸ்ரோர்ஸ்),
செல்வி கமலராணி வல்லிபுரம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.
(50505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்

# உதயன்

## கரிசனை உண்டா?

மீண்டும் அதே கதை!

வன்னியின் ஒரு மாவட்டமான முல்லைத்தீவுக்கு கடந்த இரண்டு வாரங்களாக உணவுப் பொருள்கள் அரசினால் அனுப்பப்படவில்லை. மாங்குளம்—ஒட்டுசுட்டான் வீதியில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டதால் உணவு லொறிகளை அனுப்ப முடியாத தடங்கல் நிலை, போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டதற்கு அந்தப் பிரதேசத்தில் நடைபெறும் போர்க்கள நிலையே காரணம்.

போரினால் போக்குவரத்துத் துண்டிக்கப்படுவதும், அதன் காரணமாக, தமிழ்ப் பிரதேசங்களுக்கு அரசு உணவுப் பொருள்களை அனுப்பாது விடுவதும் ஒன்றும் புதியது அல்ல.

கடந்த பல வருடங்களாக, வடக்கு—கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எல்லா மாவட்டங்களிலும் வாழும் மக்களும் இந்தக் கஷ்டத்தை — உணவின்றி பட்டினியை எதிர்நோக்குவதனை—பல தடவைகள் அனுபவித்திருக்கிறார்கள்; அனுபவிக்கிறார்கள்.

இராணுவ நடவடிக்கைகள் உச்ச நிலையில் இருந்த வேளைகளில் மட்டும் உணவு விநியோகம் தடைப்பட்டது என்பதல்ல. அரச அதிகாரிகளின் இறுக்கமான நடவடிக்கைகளினாலும் தமிழ் மக்களுக்கான உணவு விநியோகம் நிறுத்தப்பட்டதும் உண்டு.

முந்திய அரசாங்கம் வடக்கு—கிழக்கு மீது விதித்த பொருளாதாரத் தடையும், இன்றைய அரசு நடைமுறைப்படுத்திவரும் கட்டுப்பாடுகள், மட்டுப்படுத்தல்களும் தமிழர்களைப் பட்டினி போடுவதற்கு வழி செய்தன; உதவுகின்றன.

இதற்குப் பதிலாக—

தமிழ் மக்களைப் பட்டினி போடுவது எமது நோக்கமல்ல; விருப்பமல்ல. இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் விடுதலைப் புலிகளின் கைக்குப் போய்ச் சேர்கின்றன. அதனாலேயே சில கட்டுப்பாடுகளை விதிக்க நேரிடுகிறது என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படுவது வழக்கம்.

பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட இந்தக் காரணத்தைக் கூறிக்கொண்டே, இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்குரிய வசதிகளை அரசாங்கம் அடிக்கடி மறுத்து வருகிறது.

அந்தப் பகுதிகளில் வாழும் மக்களும் இந்தநாட்டின் பிரசைகள் என்று அரசு உரிமை கொண்டாடும் வரைக்கும், அவர்களின் வாழ்க்கைத்தேவைகளை நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின்பொறுப்பே. என்ன தடைகள், தடங்கல்கள் இருப்பினும் அவற்றை நீக்கி பிரசைகளின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அந்தப் பொறுப்பிலிருந்து, கடமையிலிருந்து தவறிக் கொண்டு அவர்களை விடுவிக்கவே போர் நடத்தப்படுகிறது என்று பிரசாரம் செய்யப்படுவது அர்த்தமற்றது.

தனது பிரசைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தடையாக இருப்பது தொடரும் போரே என்பதனை அரசுத் தலைவர்கள் அறியாதிருக்க முடியாது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களைப் பட்டினி போடக் கூடாது, ஏனைய வசதிகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று அரசு உண்மையாகவே விரும்பினால், போரை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது மிக அவசியம்.

இதனைக் கரிசனையுடன் கருத்திற் கொள்ள வேண்டிய காலத்தை இனியும் நீடித்துச் செல்வதுவிரும்பத்தக்கது அல்ல.

## நெடுந்தீவு மக்கள் சந்திப்பு

நெடுந்தீவு, ஒக். 20

யாழ், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கடந்த புதன்கிழமை நெடுந்தீவு மக்களைச் சந்தித்து மக்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ.பி.டி.பி. கட்சி பணிமனையில் இடம் பெற்ற இச் சந்திப்பில் நெடுந்தீவைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர். (ஐ-111)

## பரிசளிப்பு விழா

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று திங்கள் காலை 9-30மணிக்கு அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலயம் I இன் கல்விப்பணிப்பாளர் சு.இரத்தினராசாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசனும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. கைலைநாதன், நா. சத்தியநாதன், வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-31)

### கொழும்பு குண்டு வெடிப்பை அடுத்து

# 500 தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பொலீஸ் நிலையத்தில்தடுத்துவைப்பு

கொழும்பு, ஒக். 20

கொழும்பு கலதாரிஹோட்டல் குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து தலைநகரிலும் புறநகர்ப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் சுமார் 500 தமிழ் இளைஞர் யுவதிகள் விசாரணைக்காக பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

தெகிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, புறக்கோட்டை, தெமட்டகொட, மட்டக்குழி,கொட்டாஞ்சேனை, கொம்பனித் தெரு ஆகிய இடங்களிலுள்ள வீடுகள் லொட்ஜுகள், விடுதிகளில் இத்தேடுதல்கள் இடம் பெற்றன.

கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் 'செல்'களில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீதான விசாரணைகள் தொடர்கின்றன என்றும்—

நிரபராதிகள் விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கலதாரி ஹோட்டல் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட 10 பேர் கொண்ட குழுவில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள், மிகுதி 5பேர் தலைநகர் அல்லது தலைநகர்ப் புறபிரதேசங்களில் மறைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இவர்கள் தப்பிச் செல்ல வாய்ப்புகள் இல்லை என்று பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இக்குண்டு வெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட லொறியை கல்முனை வாசி ஒருவருக்கு விற்பனை செய்த முஸ்லிம் ஒருவரை கண்டி பொலீஸார் கைது செய்துள்ளார்கள்.

லொறி விற்பனையில் தரகராக செயல்பட்ட ராஜு என்பவர் தேடப்பட்டு வருகின்றார்.

அதேநேரம் குண்டுவெடிப்பு சேதங்கள், புனரமைப்பு குறித்து ஜனாதிபதி செயலாளர் கே. பாலபெட்டபந்திக்கும், தனியார் நிறுவன உரிமையாளர்களுக்குமிடையில் நேற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இப்பேச்சு வார்த்தையின் பிரகாரம் நஷ்ட ஈடு 60 சதவீதம் காப்புறுதி மூலம் வழங்கப்படும். மிகுதி 40 சதவீதத்தை தனியார்முதலீட்டு நிறுவனம் மூலம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட நிறுவனங்கள் உடனடியாக புனரமைப்புகளை மேற்கொள்ள அவற்றுக்கு அவசர வங்கிக்கடன்களைப்பெற்றுக் கொள்ளவும் இணக்கம் காணப்பட்டது. (இ-21)

## சிப்பாய், இளைஞன் விபத்தில் காயம்

குருநகர், ஒக். 20

குருநகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வீதி விபத்தில் படையினர் ஒருவரும் இளைஞன் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள்.

குருநகர் கடற்கரை வீதியில் தண்ணீர்த்தாங்கி வீதிச்சந்தியில் படையினர் இருவர் வந்த மோட்டார் சைக்கிள் இளைஞர்கள் இருவர் வந்த சைக்கிளுடன் மோதியது.

மோட்டார் சைக்கிளில் வந்த சின்னக்கடை இராணுவமுகாமைச் சேர்ந்த இ. ஜினதாச (வயது 27) முகத்தில் காயமடைந்த நிலையிலும், சைக்கிளில் வந்த குருநகர் தண்ணீர்தாங்கி வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை காந்தன் (வயது 14) இடது கால் எலும்பு பாதிக்கப்பட்ட நிலையிலும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். (இ-51)

## புதிய தபாற் பெட்டிகள்

திருநெல்வேலி, ஒக். 20

யாழ்.பிரதம தபாலக கடித விநியோக எல்லைக்குள் பழுதடைந்த இரு தபாற் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய தபாற் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மனோகரா தியேட்டருக்கு சமீபமாக சந்தியிலுள்ள தபாற் பெட்டி, திருநெல்வேலி-பலாலி வீதியிலுள்ள தபாற் பெட்டி சந்தியிலுள்ள தபாற்பெட்டி ஆகிய இரு தபாற் பெட்டிகளுமே புதிதாக வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். பிரதம தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

தபாற்பெட்டிகளில் தபால் எடுக்கும் நேரம் பொறிக்கப்படாதிருப்பது பற்றி பிரதம தபாலதிபரிடம் கேட்டபோது, தற்போதைய சூழ்நிலையில் நேரம் குறிப்பிட்டு தபால் சேகரிப்பது கடினம் என்றும் தினமும் எல்லாப் பெட்டிகளிலும் முறைப்படி தபால் சேகரிப்பு நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-135)

# ஒரு சிலரின் நடவடிக்கைகளுக்காக முழு மீனவர்களையும் தண்டிப்பதா?

### மீன்பிடி கட்டுப்பாடு குறித்து ஈ. பி. ஆர். எல். எவ்

ஒரு சில மீனவர்கள் பொருள்களைக் கடத்துகிறார்கள் என்பதற்காக முழு மீனவர்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிப்பதுநியாயமாகாது.

குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு தொடர்பாக ஈ.பி.ஆர். எல். எவ். விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 2000-க்கு மேற்பட்ட மீனவர்கள் ஒரு கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்திலேயே தற்போது மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த எல்லைக்குள் மீன்பிடிக்க முடியாதென்பது எவரும் புரிந்து கொள்ளக் கூடியது. தொழிலுக்கான நாளாந்த முதலுக்கே நஷ்டமான நிலவரத்தில் எவ்வாறு ஒரு கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் மீன் பிடிப்பதென குருநகர் மீனவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

ஏற்கனவே இருந்த ஓரளவுக்கு பரந்ததாக அனுமதிக்கப்பட்ட கடற்பரப்பே குருநகர் மீனவர்களுக்கு போதியதாக இருக்கவில்லை.

ஆனால் தற்போது அனுமதிக்கப்பட்ட பகுதி மீன் பிடிக்கச் செய்வதற்கான பாதையே தவிர, மீன் பிடிக்கக் கூடிய இடமல்ல என அப்பகுதி மீனவர்கள் விசனப்படுகிறார்கள். பதினாறு விதமான மீன்பிடித் தொழில்களைக் கொண்ட இப்பிரதேசம் இப்போது பாரிய தொழில் நெருக்கடிக்கு முகங் கொடுக்கிறது.

கல்முனைப் பகுதி தவிர்ந்த தீவுப்பகுதிக் கரைகளை எல்லைகளாகக் கொண்ட பகுதிகளில் பாதுகாப்பை ஏற்படுத்தி மீன் பிடிக்க அனுமதிக்க முடியும். ஒன்றிரண்டு பேர் பொருள்களைக் கடத்துகிறார்கள் என்பதற்காக 2000-க்கு மேற்பட்ட மீனவர்களைப் பழிவாங்குவதிலும் சந்தேகப்படுவதிலும் என்ன நியாயம் இருக்கின்றது?

புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றி பெரிதாகப் பேசப்படுகின்றது. வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்புகிறதெனப் பிரசாரப் படுத்தப்படுகிறது. ஆனால் யாழ். குடாநாட்டின் பிரதான தொழில்களில் ஒன்றான மீன்பிடி முடங்கிவிடும் அபாயம் தோன்றியுள்ளது.

கடல் பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றியும், கடல்வள ஆராய்ச்சி பற்றியும் பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் பரவைக் கடல் மீன்பிடி பற்றி அடிப்படை அறிவற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பரவைக் கடல் மீன் பிடி ஆழ்கடல் மீன் பிடியிலிருந்து வேறுபட்டது. அதற்கு மீன் பிடிப்பவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பரந்த பிரதேசம் தேவை. ஆழ்கடல் மீன்பிடி, பரவைக்கடல் மீன்பிடி என்பன வேறுபட்ட தொழில்களாகும். தொழிலின் தன்மைக்குக் கருத்துக் கெடுக்காத பாதுகாப்பு நடவடிக்கைகள் மீனவர்களுக்கு பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது.

தவிர ஏற்கனவே இருந்த கடற்பரப்பு விஸ்தரிக்கப்படுவதன் அவசியம் பற்றி ஈ.பி.ஆர். எல். எஃப் இன் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

அதன் பிரகாரம் கடற்படை அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், மாவட்ட மீன்பிடி அதிகாரிகள், மீன் பிடிச் சங்கங்கள், சமாஜங்கள் ஆகியவை அடங்கிய கூட்டமொன்றை நடத்துவதாக 551 ஆவது படைப்பிரிவின் தலைவர் தெரிவித்திருந்தார். ஆனால் இது வரையில் நடத்தப்படவில்லை.

புதிதாக எழுந்த சூழ்நிலைகளை அடுத்து 55 ஆவது படையணி தலைவருடன் மீண்டும் தொடர்பு கொண்டு வலியுறுத்தினார். அவர் அந்தக் கூட்டத்தை விரைவில் நடத்துவதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

தவிர சுரேஸ் பிரேமச்சந்திரனும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் பந்துசேனவும் உணவு விவசாய ஸ்தாபனத்துடன் (எம்.ஏ.ஓ.) பேசியதில் 750 தெப்பங்களையும், 7500 வலைகளையும் வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்துக்குள் இவை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர ஐந்து தொன் பனிக்கட்டித் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கும், இன்னுமொரு பனிக்கட்டித் தொழிற்சாலைக்கும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

கடல் வலய விஸ்தரிப்பு, பனிக்கட்டித்தொழிற்சாலை, சீனோரை இயங்க வைப்பது என்பன மீனவர்களால் முன் வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகள் ஆகும்.

ஏனைய கோரிக்கைகள்:

★ 17½ அடி நீளமான பிளாஸ்டிக் படகுகளில் ஓரளவு ஆழமான கடற்பரப்பில் தொழில் செய்ய அனுமதி.

★ 8 குதிரைச் சக்தி வலுவுள்ள வெளியிணைப்பு இயந்திரம் பாவித்து தொழில் செய்ய அனுமதி.

★ இரவு வேளைகளில் தொழில் செய்ய அனுமதி.

★ பாதிப்படைந்தவர்கள் புதிய தொழில்களை உருவாக்க மானிய அடிப்படையில் கடன் வசதி.

★ உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு சகாய உதவியும் மேலதிக தொழில் ஊக்குவிப்பு உதவியும்.

★ தேவையான வலை, உபகரணங்களையும் இயந்திர உதிரிப்பாகங்களையும் சங்கமூலம் கொழும்பிலிருந்து இலகுவாகக் கொண்டுவர அனுமதி.

★ எரிபொருளைச் சங்க மூலம் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்ய அனுமதி.

ஆகியகோரிக்கைகளை முன் வைக்கிறார்கள். இவற்றைப் பெறுவதற்கான மீனவர்களின் சகல முயற்சிகளுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். தனது பூரண ஆதரவை வழங்கும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நாளை

**ஐப்பசி 4**

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி பின் இரவு 2.15 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம் முற்பகல் 8.27 வரை.

சுபநேரம்: 10.32-12.02

ராகுகாலம்: 3.02-4.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இறுதி வெற்றிக்கு உதவுமாறு தப்பிய படையினருக்கு அழைப்பு

கொழும்பு, எக். 20

''வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தமது இறுதிக்கட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு இராணுவத்தை விட்டு தப்பிச் சென்றோர் உதவ வேண்டும். அவர்கள் மீண்டும் திரும்பி வந்து இராணுவத்தில் இணைய வேண்டும்.''

மேற்கண்டவாறு வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் கோரிக்கை விடுத்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் வவுனியா—கிளிநொச்சி நெடுஞ்சாலையை விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கும் பணியில் தொடர்ந்தும் வெற்றிகரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல இடங்களில் பாதுகாப்புப் படையினர் தங்கள் நிலைகளைப் பெரிதும் பலப்படுத்தியுள்ளார்கள்.

புலிகளின் பிரதான விநியோக போக்குவரத்துப் பாதைகளை பாதுகாப்புப் படையினர் தடுத்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் தமது முக்கிய குறிக்கோள்களை அடைவதற்காக பெரும் உறுதியுடனும், திடசங்கற்பத்துடனும் போராடி வருகிறார்கள்.

நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல் மூலம் அவர்கள் பல வெற்றிகளைச் சாதித்துள்ளனர்.

ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நெடுங்கேணியில் இருந்தும், வவுனியாவிலிருந்தும் முன்னேறிச் சென்ற படையினர் ஒரு குறிப்பிட்ட முனையில் சந்தித்த வேளையில் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் முதல் கட்டம் பூர்த்தியடைந்தது.

2 ஆம் கட்டத்தின்போது பாதுகாப்புப் படையினர் எதிர்பார்த்த இலக்கை சென்றடைந்துள்ளனர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# கைதானோரின் சைக்கிள்கள் ஈ.பி.டி.பி. இன்று ஒப்படைக்கும்

யாழ்ப்பாணம், ஒக் 20

பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதுசெய்யப்பட்ட 9 பேரின் உடைமைகள் இன்று யாழ். நகர ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு வழங்கப்படும்.

சம்பந்தப்பட்டவர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு ஈ. பி. டி. பி. அமைப்பினால் கோரப்பட்டுள்ளனர்.

முத்தையா ரவிச்சந்திரன் — தபாற்கந்தோர் வீதி, கோகுவில் கிளிநொச்சி.

இராஜரத்தினம் கோபாலரத்தினம் — சிவகுரு குருக்கு ஒழுங்கை கொக்குவில்மேற்கு.

இரத்தினம் அருந்தவக்குமார் — கைதடி கிழக்கு.

தேவராணி நல்லையா — அறுகுவீதி, சட்டசிறா, கோப்பாய்தெற்கு.

சண்முகசுந்தரம் சிவசுந்தரம் — கைதடி தெற்கு.

அந்தோனிப்பிள்ளை டெனிரூபம் — குருநகர் கோயிலடி கொட்டியாவத்தை, நெல்லியடி.

நந்தன் ரவிக்குமார் — கச்சாய வடக்கு கொடிகாமம்.

நடராசா சூரியகுமார் — 490, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் ஆகியோரின் சைக்கிள்களும்—

தாமோதரம்பிள்ளை ஜெயராம் — தபாற்கந்தோர், கக்குலி வீதி, சாவகச்சேரி என்பவரது ஒரு அல்மீனியத்துண்டுமே ஒப்படைப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

இன்று இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் யாழ். மல்லாகம் நீதிமன்றில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## சைவப் புலவர் பரீட்சை

திருநெல்வேலி, ஒக். 20

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தவிருக்கும் சைவப் புலவர் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-135)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா வாரிப்பிள்ளை [பராசக்தி]

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட பராசக்தி காலமாகிவிட்டார்.

இவர் இராசையா [உத் ரவுபெற்ற வியாபாரி A.D. 89] அவர்களின் மனைவியும், சிவலிங்கம், வீரலட்சுமி, முத்துலிங்கம், நாகலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் தாயாரும், கௌரி, கணபதிப்பிள்ளை, சுந்தரேஸ்வரி, நேசராசா, செல்வராசா ஆகியோரின் மாமியும், சிவசங்கர், கௌரிசங்கர், சிவகார்த்திகா, பத்மசங்கர், மாலிவாணி, ஸ்கந்தமாவலி, தசரோகினி, மஞ்சுளா, காலஞ்சென்ற நிரஞ்சலா, ஜெயப்பிரகாஸ், ஜெயசுதன், ஜெயப்பிரதா, ஜெயகார்த்தீபன், சுகஞ்யா, சுசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-10-97) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:

இ. முத்துலிங்கம்
(மகன்)

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[சி/1823]

# படகு ஒன்றை மீட்டதாக தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 20

தொண்டமானாற்றில் இருந்து ஏழு மைல் வடக்கே உயர் சக்தி வாய்ந்த நான்கு மோட்டார்கள் பொருத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் சிறிய கண்ணாடி இழைப் படகு ஒன்று கடலில் மூழ்கிய நிலையில் கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு ரேடார் இயந்திரம், கனரக துப்பாக்கி, வெடிபொருள்கள், ஆர் பி.ஜி மற்றும் மோட்டார் குண்டுகளை அந்தப் படகில் இருந்து படையினர் கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

றில் தங்கியிருந்தார் என்றும் —

குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கும் இவருக்கும் நேரடித் தொடர்புகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அதிகாரிகள் முழு அளவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

(இ-9)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

டன் நடத்திய கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வருகின்ற போதும், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக வெகுஜனப் போராட்டங்களை நடத்தி அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து வருகிறது.

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக நாம் வாக்களித்து வருகிறோம்.

யாழ்ப்பாணத்தில் காணாமற்போனோர்விடயம், வவுனியாவில் மக்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடயம் உட்பட பல்வேறுவிடயங்கள் தொடர்பாக 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் மாவட்டங்களில் வெகுஜனப் போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

இதுவரை வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்தப் போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

விரைவில் இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசவிருக்கிறோம்.

ஜனாதிபதி சரியான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் கொழும்பு நாடாளுமன்றம் முன்பாக வெகுஜனப் போராட்டம் நடத்துவோம். இதற்காக வவுனியா, மன்னார், திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து மக்களை அழைத்துச் செல்வோம்.

எதிர்க்கட்சியினரின் ஆதரவையும் இந்த போராட்டத்துக்கு பெற முயற்சிப்போம்.

இந்தப் போராட்டங்களுக்கு அரசு மதிப்பளிக்காது விட்டால் உலக நாடுகளிடம் இலங்கைக்கு உதவ வேண்டாம் என்று பகிரங்கமாக கோரிக்கை விடுப்போம் —என்றார். (இ-3)

## நாளைய...

(முதலாம் பக்கத் தொடர்)

தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தேச அரசமைப்பு சீர்திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தலைநகரிலும் பிற பிரதேசங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-21)

# குண்டுவெடிப்பில் காயமடைந்த பிரி. நிபுணர்கள் நாடுதிரும்பினர்

## துறைமுக திட்ட வேலைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஒக் 20

கொழும்பு எலிசபெத் இறங்குதுறையை அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்ள அமர்த்தப்பட்டிருந்த 4 பிரிட்டிஷ் சட்ட நிபுணர்களும் கொழும்பு குண்டு வெடிப்பில் காயமடைந்து, பின்னர் தமது நாட்டுக்குத் திரும்பிவிட்டனர்.

திடீரென இந்த நிபுணர்கள் சென்றதால் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் கொழும்பு துறைமுக அதிகார சபை அதிகாரிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்ட நிபுணர்களுக்கு சம்பளமாக 5 கோடி ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதாகவும் —

இவர்கள் தமது நாட்டுக்கு சென்றதால் ஸ்தம்பித நிலையில் உள்ள அத்திட்டத்தை பூரணமாக்க வேறு நிபுணர்களை தேடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## குண்டு வெடிப்பை அடுத்து

# இந்தியாவில் ரணிலுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 20

கொழும்பில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து —

அச்சமயம் இந்தியாவில் தங்கியிருந்த எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை இந்திய அதிகாரிகள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க தம்முடன் சென்றிருந்தவர்களுடன் டில்லியில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார்.

அங்கு தொலைக் காட்சியில் குண்டு வெடித்த சம்பவம் தொடர்பான தகவலைப் பார்த்த ரணில் உடனடியாக கொழும்புக்கு கட்சிச் செயலாளர் காமினி அத்துக்கொரளவுடன் தொடர்பு கொண்டார்

சம்பவம் தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுமாறு அத்துக்கொரள கேட்கப்பட்டார்.

இந்நேரத்தில் ரணில் தங்கியிருந்த ஹோட்டலுக்கு சென்ற இந்திய அதிகாரிகள் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து, பாதுகாப்பான வேறு ஹோட்டல் ஒன்றுக்கு அவரை மாற்றி விட்டார்கள்.

அதே சமயம் ரணிலின் விஜயம், எலிசபெத் மகாராணியாரின் விஜயத்துடன் இடம்பெற்றதால் இந்தியாவில் ரணிலுக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று இந்தியப் பத்திரிகைகள் தெரிவித்தன.

(இ-3)

## யாழ். மாவட் ...

(முதலாம் பக்கத் தொடர்)

னந்தா கலந்துரையாடினார்.

குடாநாட்டுக்கு மாதாந்தம் 16 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும், 12 லட்சம் லீற்றர் டீசலும் தேவையாக உள்ளது என்றும் —

ஆனால் அந்த அளவு எரிபொருள் குடாநாட்டுக்கு வருவதில்லை என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இதுவிடயமாக அமைச்சுக்கு உடன் ''பக்ஸ்'' செய்தி அனுப்பப்பட்டது.

கப்பல் மூலம் கூடுதலான எரிபொருளை அனுப்ப அமைச்சர் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் விறகுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் எல். பீ. சமையல் வாயுவை எடுத்து வர முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## கலதாரி...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேசமயம் குண்டுத் தாக்குதலின் போது சேதமடைந்த உலக வர்த்தக மையத்துக்கு ஏற்பட்ட சேதம் 108 கோடி ரூபா என்றும் —

ஹில்டன் ஹோட்டலுக்கு ஏற்பட்டசேதம் 50 லட்சம் ரூபா என்றும் —

இலங்கை வங்கி தலைமையகத்துக்கு ஏற்பட்ட சேதம் 85 லட்சம் ரூபா என்றும் —

இன்டர் கொண்டினன்டல் ஹோட்டலுக்கு ஏற்பட்ட சேதம் 50 லட்சம் ரூபா என்றும் — இதுவரை வெளியான மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (இ-21)

## புல்மோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்)

னர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று பிற்பகல் வெளியிட்ட செய்திக் குறிப்பில் நேற்று முன்தினம் 9 மணியளவில் கடற்படை படகுகள் புல்மோட்டையில் இருந்து வடபகுதிக்கு பெரும் எண்ணிக்கையான புலிகளை ஏற்றிச் சென்ற படகுகளை அவதானித்தபோது அவற்றைத்தாக்க ஆரம்பித்தன.

5 மணித்தியாலங்களுக்கு மேலாக கடலில் இடம்பெற்ற இந்தச் சமரில் புலிகளின் 7 படகுகள் அழிக்கப்பட்டன. இரு படகுகள் சிறு சேதத்துக்குள்ளாகின.

ஏனைய படகுகள் சேதத்துடன் தப்பிவிட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருமளவிலான ஆயுதங்களால் தாக்கப்பட்ட கடற்படையின் அதிவேக தாக்குதல் படகு ஒன்று முற்றாகச் செயலிழந்து விட்டது.

இரு தற்கொலைப் படகுகளால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் அப்படகு கடலில் மூழ்கியது. படகில் இருந்த மாலுமிகளில் 5 கடற்படை அதிகாரிகள் காப்பாற்றப்பட்டனர். காணாமற் போயுள்ள ஏழு கடற்படை அதிகாரிகளை கண்டுபிடிப்பதற்கு விமானப்படையினரின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உயிர்தப்பி வரும் கடற்படையினரைக் காப்பாற்றுவதற்கும், புலிகளை கைது செய்வதற்கும் கரையோரத்தில் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-21-9-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி. 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-10-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org